திரு. இரா. புதுநயினார் ஆதித்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பீடி சுற்றும் தொழிலில் பெரும்பாலான பெண்கள் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள். என்னுடைய சேரன்மாதேவி சட்டமன்றத் தொகுதி முழுவதிலுமே, அந்தத் தொழில் அதிகமாக இருக்கிறது. ஆனால், அந்தப் பெண்கள் கிராமத்திலேயிருந்து அந்த மூலப்பொருட்களை வாங்குவதற்கு அந்த கடைக்கு வந்து போய், மீண்டும் தாங்கள் சுற்றிய பீடிகளை அந்தக் கடையிலே கொடுத்து பணம் பெறுவதற்கு மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். எனவே, அவர்களுக்கு அந்த மூலப் பொருட்களை வீடுகளிலேயே கொடுக்க அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம்: பேரவைத் தலைவர் அவர்களே, பீடித் தொழிலாளர்கள் பிரச்சினை பற்றி ஒரு வழக்கு உச்ச நீதிமன்றத்திலே தாக்கல் செய்யப்பட்டு அதிலே அவர்களுடைய 11 பிரச்சினைகளை, இங்கே குறிப்பிட்ட பெண் தொழிலாளர்கள் பிரச்சினைகள் உட்பட 11 பிரச்சினைகளைத் தனிமைப்படுத்தி, அதைத் தீர்த்து வைப்பதற்கு முயற்சி எடுக்க வேண்டும் என்று உச்ச நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்தது. அந்த அடிப்படையிலே நாம் முத்தரப்புக் கூட்டத்தைக் கூட்டி, பீடி நிர்வாகம், பீடித் தொழிலாளர்கள் ஆகியோர் பிரதிநிதிகளும், பொது சேம நல நிதி அமைப்பு மற்றும் மத்திய சுங்க வரித் துறை அதிகாரிகளும், நம்முடைய தொழிலாளர் நலத்துறையைச் சேர்ந்த அதிகாரிகளும் கலந்து கொண்ட அந்தக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகளின்படி இந்தப் பிரச்சினைகளுக்கு ஒரு திட்டம் தயாரித்து அனுப்பப்பட்டிருக்கிறது. அதிலே இந்தப் பிரச்சினையும் வந்திருக்கிறது. அந்தத் திட்டத்தின் அடிப்படையிலே மேற்கொண்டு நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண். 72, திரு. கே. தவசி. மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்.

72—

ஆரம்ப சுகாதார நிலையத்தை அரசு மருத்துவ மனையாக்குதல்.

*791 **திரு. கே. தவசி:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) ஆண்டிப்பட்டியில் செயல்பட்டு வந்த அரசு மருத்துவமனை ஆரம்ப சுகாதார நிலையமாக மாற்றப்பட்டதை

1991 செப்டம்பர் 25]

மீண்டும் அரசு மருத்துவமனையாகவே மாற்ற அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில் எப்போது மாற்றப்படும்?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆண்டிப்பட்டி ஆரம்ப சுகாதார நிலையத்தை மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமாக மாற்ற பகுதி II திட்டத்தின் கீழ் செயற் குறிப்பு ஒன்று அரசின் பரிசீலனையில் உள்ளது. இந்த ஆரம்ப சுகாதார நிலையத்தில் நுண்கதிர் வசதியும் பொருத்தப்பட்டுள்ளது.

(ஆ) அரசின் ஆணை வெளியிட்ட பின்பு, மேல் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

முற்பகல் 10.05

திரு. கே. தவசி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்கள் ஆண்டிப்பட்டி சட்டமன்ற உறுப்பினராகவும், தமிழ்நாடு முதலமைச்சராகவும் இருக்கிறபொழுது முதலில் ஆரம்ப சுகாதார நிலையங்களாக இருந்தது அரசு மருத்துவமனைகளாக செயல்படும் என்று அறிவித்தார். அதற்கேற்ப எக்ஸ்ரே கருவிகள் வழங்கப்பட்டு இன்னும் செயல்படவில்லை. படுக்கைகள் வாங்குவதற்கான அனுமதிகள் அளிக்கப்பட்டுள்ளன. ஆயினும் தற்போது ஆண்டிப்பட்டி மருத்துவமனை ஆரம்ப சுகாதார நிலையமாகவே உள்ளது. மேலும் ஆரம்ப சுகாதார நிலையத்தில் தற்போது இரண்டு ஆண் மருத்துவர்கள் மட்டுமே உள்ளனர். பெண் மருத்துவர்கள் இல்லை...

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வியாகக் கேளுங்கள்.

திரு. கே. தவசி : எனவே இப்போதுள்ள சூழ்நிலையில் புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சியில் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் சில குறிப்பிட்ட மருத்துவமனைகளை அப்'கிரேட' செய்து அறிவிப்பதாக இருக்கிறார். அது இந்த ஆண்டில் செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1987 ஆம் ஆண்டுக்கு முன்பு அது அரசாங்க மருந்தகமாக இருந்தது. 1—6—87-லே அது ஆரம்ப சுகாதார நிலையமாக மாற்றப்பட்டிருக்கிறது. அன்றையிலிருந்து அது ஆரம்ப சுகாதார நிலையமாகத்தான்

இயங்கிக் கொண்டிருக்கிறது. ஆனாலும் அங்கே போதிய அளவிற்கு மருத்துவப் பணியாளர்கள் நியமிக்கப்படவில்லை. இப்போது அது தாலுக்கா தலை நகரமாக உயர்த்தப்பட்டிருக் கின்ற காரணத்தால் 32 படுக்கைகளைக் கொண்ட தாலுக்கா மருத்துவமனையாக அதை நிலை உயர்த்த வேண்டுமென்று கருதி, இப்போது அரசாங்கத் துறையின் பரிசீலனையில் உள்ளது. ஆனால் திட்டத்திலே அதை சேர்க்கிற அளவிற்கு அது வந்து சேரவில்லை. அடுத்த ஆண்டு அதைப்பற்றி பரிசீலிக்கலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. தேனி பன்னீர் செல்வம்.

திரு. தேனி பன்னீர்செல்வம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆரம்ப சுகாதார நிலையங்களை அரசு மருத்துவமனைகளாக மாற்றுகின்ற இந்த நிலையிலே மதுரை மாவட்டத்தில் இதே போன்று, ஆரம்ப சுகாதார நிலையங்களை மீண்டும் அரசு மருத்துவ மனைகளாக மாற்று கின்ற செயற்குறிப்பு ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா? அப்படியிருந்தால், எங்களுடைய போடி தொகுதி யில் தேவாரத்திலுள்ள......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது ஆண்டிப்பட்டி. முதல் கேள்வியோடு நிறுத்திக் கொள்ளுங்கள். காரணம் ஸ்பெசிபிக்காக பதில் வராது.

திரு. தேனி பன்னீர்செல்வம் : ஆரம்ப சுகாதார நிலையத்தை மீண்டும் அரசு மருத்துவமனையாக மாற்று கின்ற உத்தேசம் அரசுக்கு இருக்கிறதா என அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, தனியாகக் கேள்வி போடுகின்ற பொழுது அதற்கு முழு விளக் கத்தையும் சொல்ல முடியும். எனவே, இந்த ஆரம்ப சுகா தார நிலையத்தைப் பொறுத்த வரையில், அதற்குத் தேவை யான பணியாளர்களை நியமிப்பதைப்பற்றி திட்டம் 2-ன் கீழ் அதற்கான பரிசீலனைக்கு இப்போது அனுப்பியிருக்கிறார் கள். அதையும் கூட அடுத்த ஆண்டுதான் பரி சீலிக்கமுடியும். மதுரை மாவட்டம் முழுவதும் எந்தெந்த ஆரம்ப சுகாதார நிலையத்தை உயர்த்துவது என்பதைப் பற்றிய தகவல் இப்போது என்னிடமில்லை. அதைப்பற்றி தனியாக கேள்வி போடுகின்ற போது தருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 73, மாண்புமிகு உறுப்பினர் திரு. வ. சத்தியமூர்த்தி. மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர்.